අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/5/68/5/4/3/தற்காலிக

ඔබේ අංකය / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2018.07.-6

சுற்றறிக்கை இலக்கம் : 22/2018

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல தேசிய பாடசாலைகளின் அதிபர்கள்,

**<u>தேசிய பாடசாலைகளுக்குரிய தங்குமிட விடுதிகளை ஒதுக்குதல்.</u>**

தேசிய பாடசாலைகளுக்குரிய தங்குமிடங்களை ஒதுக்குவதற்காக உரிமை கொண்ட உத்தியோகத்தர்களுக்கிடையே தாபன விதிக் கோவை XIX ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகளைப் பின்பற்றி ஒதுக்கும் போது கீழ்க் குறிப்பிட்ட ஆலோசனைகளுக்கமைய செயற்படவும்.

I. தாபன விதிக் கோவையின் XIX ஆம் வாசகத்தின் முதலாவது பிரிவிற்கமைய வகைப்படுத்தப்பட்டு உப ஆவணப்படுத்தப்பட்ட இல்லங்களை முடியுமான அளவு அப் பதவிக்கு அல்லது தரத்திற்குரிய உத்தியோகத்தருக்கு மாத்திரம் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு உப ஆவணப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் இல்லாத சந்தர்ப்பத்தில் அல்லது அவ் உத்தியோகத்தருக்குரிய விடுதி தேவையற்றது என எழுத்து மூலம் அறிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் சகல விடயங்களையும் உள்ளடக்கிய அறிக்கையினை தேசிய பாடசாலை அதிபருக்கு சமர்ப்பித்து உரிய தங்குமிட விடுதியினை வேறு உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்க விசேட அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

II. பொதுச் சேவை இல்லங்கள் இருப்பின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் வாசகத்தின் 4.1 பிரிவிற்கமைய இல்லங்களைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமைகள் தீர்மானிக்கப்பட வேண்டும்.

III. தங்குமிட விடுதியினைப் பெறுவதற்கு பயணாளிகளை தேர்ந்தெடுக்கும் போது தாபன விதிக் கோவையின் XIX ஆம் வாசகத்தின் 4:2, 4:3 மற்றும் 4:4 வாசகங்களின் ஆலோசனைகளுக்கமைய செயற்பட வேண்டியதுடன், 4:4:1 பிரிவிற்கமைய செயற்படுவதாயின் தேசிய பாடசாலைப் பணிப்பாளர் மற்றும் கல்விச் செயலாளரின் பரிந்துரையுடன் தாபனப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

IV. இல்ல வாடகை தொடர்பில் தாபன விதிக் கோவையின் XIX ஆம் வாசகத்தின் 5 வது பிரிவிற்கமைய செயற்பட வேண்டியதுடன், அறவிடப்பட்ட விடுதிக் கூலி தொடர்பில் சகல ஆண்டிலும் சுருக்கமான அறிக்கையினை அடுத்த ஆண்டின் முதலாவது காலாண்டு நிறைவடைவதற்கு முன்னர் தேசிய பாடசாலைப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும். தங்குமிட இல்லம், அதன் வகை, ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர் மற்றும் அவரது பதவி, முதற் தடவையில் அவருக்கு ஒதுக்கப்பட்ட திகதி, வீட்டின் மதிப்பீட்டுப் பெறுமதி, உத்தியோகத்தரின் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை அறவிடப்பட்டுள்ள இல்ல வாடகையினையும் அவ் அறிக்கையில் உள்ளடக்க வேண்டும்.

V. தாபன விதிக் கோவையின் XIX ஆம் வாசகத்தின் 6 வது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை நிபந்தனை கடுமையாக பின்பற்றுவதனை உறுதிப்படுத்துவதற்காக வலயக் கல்விப் பணிப்பாளரினால் பொருத்தமான வேலைத்திட்டங்களை வகுத்து அமுல்படுத்த வேண்டும்.

VI. தாபன விதிக் கோவையின் XIX ஆம் வாசகத்தில் 7 வது மற்றும் 9 வது பிரிவுகளின் கீழ் செயற்பாடுகளை மேற்கொள்வதில் அதிகாரங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பொறுப்பளிக்கப்படுவதுடன் அதற்கமைய அவர்களினால் ஒதுக்கப்படும் செயற்பாடுகளை தாமதமின்றி வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக தேசிய பாடசாலை கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

VII. தாபன விதிக் கோவையின் XIX ஆம் வாசகத்தின் 8 வது பிரிவின் கீழ் செயற்படுவது வலயக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பு என்பதுடன் உரிய பாடசாலை அதிபரினாலும் பொருட்பட்டியல் புத்தகத்தின் (பொருட் பட்டியல்) பிரதியினைப் பேண வேண்டும்.

VIII. மேற்கூறப்பட்ட ஆலோசனைகளுக்கமைய செயற்படும் போது தங்குமிட இல்லங்களின் தரம் மற்றும் பராமரிப்புக்கள் தொடர்பில் அதிபர்களினால் கவனம் செலுத்த வேண்டியதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் தாமதமின்றி எழுத்து மூலம் வலயக் கல்விப் பணிப்பாளரை அறிவுறுத்தி உரிய பராமரிப்புப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும்.

02. தங்குமிட இல்லங்களைப் பெற உரிமை இல்லாத உத்தியோகத்தர்களுக்கு எக்காரணம் கொண்டும் தங்குமிட இல்லங்களை ஒதுக்கக்கூடாது என்பதுடன் ஏற்கனவே அவ்வாறு ஒதுக்கப்பட்டிருப்பின் இச் சுற்றறிக்கையின் தினம் தொடக்கம் 06 மாதங்கள் செல்வதற்கு முன்னர் தாபன விதிக் கோவையின் XIX வாசகத்தின் 7 மற்றும் 9 வது பிரிவுகளின் கீழ் செயற்பட்டு அவ் இல்லங்களை மீளப் பெற்றுக் கொண்டு முறையாகப் பொருத்தமான உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுக்குமாறு அறியத்தருகிறேன்.

சுனில் ஹெட்டிஆரச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு